1219

Regd. No. M. 2797. (விலை அணா ஒன்று.)

# வர்த்தக ஊழியன்.

# VARTHAGA OOLIAN.

Trichinopoly. } Monthly Journal of Commerce, Trade and Industry. { JUNE 1935

மலர் 3.] திருச்சினாப்பள்ளி ஜூன்-மீ - 1935 [இதழ் 36

14 JUN 1935

"வர்த்தக ஊழியன்" வருட சந்தா.

உள்நாட்டிற்கு ரப் ரூ. 1. கி. ரூ. 3 வெளி நாட்டிற்கு ரூ. 1½

**மாதம் ஒன்றுக்கு விளம்பர விகிதம்.**

அங்குலம் ஒன் றுக்கு ரூ. 1—0—0.

பக்கம் ஒன் றுக்கு ரூ. 15—0—0.

அரை பக்கத்திற்கு ரூ. 10. ராப்பர் பக்கத்திற்கு ரூ. 25.

**முன்பணமில்லாது விளம்பரங்கள்** பிரசுரிக்க முடியாது. நீடித்தகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதவும்.

ஆசிரியர்—திரு. டி. வி. கே. நாயுடு.

அட்டவணை.


| | |
|---|---|
| சேத்கஸ்தூரிபாய்லால்பாய் தலைமையுரை ... | 307 |
| வியாபார முறை ... | 308 |
| நிக்கல் மூலாம் போடும் விதம் ... | 309 |
| சாமான்களுக்கு ரயில்வே சார்ஜ்கள் ... | 310 |
| மதிப்புரைகள் ... | 312 |
| மார்க்கட் நிலவரம் ... | 314 |
| Report of London Chamber ... | 316 |
| Industrial Enterprises ... | 318 |
| Hyderabad State News ... | 319 |
| S. I. Ry. Advisory Committee ... | 321 |
| South African Trade ... | 322 |
| Sir Osborne Vs Sir James Grigg ... | 323 |
| Travancore State News ... | 324 |
| Exhibitions ... | 326 |
| Cochin State News ... | 327 |
| Trade Secrets ... | 328 |


"VARTHAGA OOLIAN"

Annual Subscription.

Inland Rough Rs 1. Glaze Rs. 3. Foreign Sh. 4.

Advertisement Tariff Per Insertion..

One inch Rs. 1—0—0. One Page Rs. 15—0—0

Half Page Rs. 10—0—0. Wrapper Page Rs. 25.

Advertisement without prepayment will not be considered. For further particulars write to the Manager.


## RECEIPT OF A COPY OF

## 'VARTHAGA OOLIAN'

IS AN INVITATION TO SUBSCRIBE OR TO ADVERTISE.

*All Correspondence, Money Orders, etc., must be addressed to:—*

*THE MANAGER,*

"VARTHAGA OOLIAN",

TRICHINOPOLY, SOUTH INDIA.

"வர்த்தக ஊழியன்"

வர்த்தக முன்னேற்றம் கருதி வெளிவரும் சிறந்த மாதப் பத்திரிகை.

இந்தியா, இலங்கை, பினங்கு, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலுள்ள பிரபல வர்த்தகர்களாலும், மற்றும் பல பொது மக்களாலும் உலகத்தில் பல பாகங்களில் நிறுவப்பட்டிருக்கும் வர்த்தக சங்கங்களாலும் நன்கு ஆதரிக்கப்பட்டு, பிரதி ஆங்கில மாதம் முதல் வாரத்தில் பல ஆயிரக்கணக்கான இதழ்களுடன் வெளி வருவது.

வர்த்தக ஊழியனில்.

வர்த்தகர்களுக்கு இன்றியமையாத கட்டுரைகள், சாமான்களுக்கு ரெயில்வே, கட்டணங்கள், வர்த்தகத் துணுக்குகள், அன்னிய நாட்டு வர்த்தக விஷயங்கள், தொழில் அபிவிருத்தி, வர்த்தகக்குறி வழக்கு முதலிய பலபல விஷயங்கள் வெளிவரும். மதிப்புரைக்காக பக்கங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

வர்த்தக ஊழியனில்.

விளம்பரம் செய்வதினால் தக்க லாபத்தையடையலாமென்பது திண்ணம். குறைந்தசெலவில் நிறைந்த லாபத்தையடைய விரும்பினால், வர்த்தகஊழியனில் விளம்பரம் செய்யுங்கள்.

சந்தா { உள்நாட்டிற்கு ரூ. 1—0—0.
வெளிநாட்டிற்கு ரூ. 1—8—0.

மானேஜர், வர்த்தக ஊழியன், திருச்சினாப்பள்ளி.



இனாம்! இனாம்!! இனாம்!!!

ஆரோக்கியம், செல்வம் சுகம் இவைகளைக் காட்டும்,

காம சாஸ்திரம்.

என்னும் புஸ்தகத்தை கேட்போருக்கு இனாமாகவும், தபாற் சிலவு இல்லாமலும் அனுப்பப்படும். இதுவரையில் 23,87,000 பிரதிகளை வினியோகித்திருக்கிறோம்.

உடனே விலாசத்தை தெரிவியுங்கள்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26. பிராட்வே,
மதறாஸ்.



T. R. ரெங்கசாமி நாயுடு,

வர்ணம் & கண்ணாடி வியாபாரம்,

341, 342, பெரியகடைவீதி, திருச்சினாப்பள்ளி.

எம்மிடம் பிரசித்திப்பெற்ற கம்பெனிகளின் நேர்த்தியான வார்னீஷ், வர்ணங்கள், முகம் பார்க்கும் நிலைக்கண்ணாடிகள், ஜன்னல் கண்ணாடிகள், கலர் கண்ணாடிகள்.

ராஜா ரவிவர்மாவின் அழகிய சித்திரப்படங்கள், ஜெர்மன் & இங்கிலீஷ் லேடி & சீனரி படங்கள், போஸ்டு கார்டுபடங்கள், படங்களுக்கு வேண்டிய சட்டம் கண்ணாடிகள், கால் அங்குல வெளிச்ச கண்ணாடிகள், அட்டை, டின்பிளேட் வகைகள்.

திருவிழாக்களுக்கு வேண்டிய கலர் காகிதங்கள், வர்த்தி தகடுகள், கண்ணாடி மணி தினுசுகள், அசல் தங்கம் & வெள்ளி ரேக்குகள் முதலியவைகள் விலை சரசமாயும், நயமானதாயும் கிடைக்கும்.

(பிராலக் பெயின்ட் இங்கு விற்கப்படும்.)

ஒரு முறை ஆர்டர் கொடுத்து பாருங்கள்.

"நாணயம் நனி பேண்"

# "வர்த்தக ஊழியன்"

திருச்சினப்பள்ளி

1935-வருஷம் ஜூன்-மாதம்.

## சேத் கஸ்தூரிபாய் லால்பாய் தலைமையுரை.

(Mr. Kasturibhai Lalbhai's Speech)

இந்திய வர்த்தக சங்கங்களின் எட்டாவது வருடக்கூட்டத்தில் தலைமைவகித்த திருவாளர் கஸ்தூரிபாய் லால்பாய் அவர்கள் தமது வர்த்தக அனுபவத்தின் பலனை வெகு தெளிவாக எடுத்துச் சொல்லியிருந்ததை பலரும் கவனித்திருப்பார்களென்று நம்புகிறோம். வர்த்தக நிலைமையைப்பற்றிபொருளாதார நிலைசற்று சீர்ப்பட ஆரம்பித்திருக்கிறதென்றும் வர்த்தக மந்தம் சற்று குறைந்திருப்பதாகத் தெரிகிறதென்றும் ஆனல் மொத்தமாகப் பார்த்தால் பொதுஜனங்களின் வருமானம் உயரவில்லையென்றும் உண்மையை உள்ளபடியே சொல்லியிருப்பதையும் இதன் முக்கிய காரணம் தங்க ஏற்றுமதியும் பரிவர்த்தனை விகிதமும் என்று சொல்லியிருப்பதையும் கவர்ன்மெண்டாரும் கவனித்து வேண்டிய பரிகாரங்கள் செய்வார்களென்று நம்புவதோடும், வர்த்தக சங்கங்களும் விடா முயற்சியுடன் கவர்ன்மெண்டாருக்கு அடிக்கடி தீர்மானங்கள் மூலமாக தெரிவித்துக் கொண்டிருப்பார்களென்றும் எதிர்பார்க்கிறோம். மேலும் ரயில்வேசம் மந்தமாக அவர் பேசினதாவது:— 'ரயில்வேக்கள் போட்டமுதலுக்கு தக்கவருமானம சம்பாதிப்பதற்காக இல்லை என்பதையும் கட்டணம் போக்குவரத்தை பாதிக்காதபடி ரயில்வேயைத் திறமையாகவும் குறைந்த செலவிலும் தாங்கள் நிர்வகிக்கவேண்டுமென்பதையும் அதிகாரிகள் உணரவேண்டியிருக்கிறது" ரயில்வேகம்பெனியார் வர்த்தகர்களுக்கு ரயில்வே கட்டணத்தை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைத்து சௌகரியம் செய்து கொடுத்தால் வர்த்தகம் இன்னும் அதிகமாக விருத்தியடைய சாதகமாகயிருக்கும். சமீபத்தில் விருதுநகர் வர்த்தகர்களுக்கும் தென்னிந்திய ரயில்வே கம்பெனியாருக்கும் குறைந்த கட்டணம் சம்மந்தமாக தகராறுஏற்பட்டிருப்பதாயும் அதனல் வெகுவாக வர்த்தகம் தடைபட்டிருப்பதாயும் சாமான்கள் இப்பொழுது மாட்டுவண்டிகள் மூலமாக பக்கத்து ஊர்களிலிருந்து கொண்டு வருவதாகவும் அறிகிறோம். இம்மாதிரியான நிலைமையை ரயில்வே கம்பெனியார் சமாளிக்கமுடியாவிட்டால் கவர்ன்மெண்டார் இதில் பிரவேசித்து சமாதானமான ஓர் ஏற்பாட்டை செய்வார்களென்று நம்புகிறோம். "கைத்தொழில் விஷயங்களில் பிறர் கையை எதிர்பாராதிருக்க வேண்டுமென்ற முறையை பிரிட்டன் உள்பட பல தேசங்கள் கையாண்டு வந்த போதிலும் இந்திய கவர்ன்மெண்டார் இந்நாட்டை கைத்தொழில் மிகுந்த நாடாகச் செய்யும் முறையை மேற் கொள்ளவில்லையென்று" திரு கஸ்தூரிபாய் குறை சொல்லுவது பொறுத்தமான தென்றே சொல்லலாம். இனியாகிலும் கவர்ன்மெண்டார் இம்மாதிரியான குறைகளுக்கு இடம்கொடுக்காமலிருக்கும்படி நடந்து கொள்ளுவார்களென்று எதிர்பார்க்கிறோம். வரிகள் அடிக்கடி விதிப்பதை கண்டித்து வர்த்தக ஒப்பந்தங்கள் மூலம் வர்த்தக வரி முறை மாற்றப்படுவதையும் இதனல் தேசக் கைத் தொழில்களுக்கு உண்மையில் பாதுகாப்பென்பது இல்லாமல் போகுமென்று சொல்லி ஒரு வர்த்தகத்தில் அளிக்கும் அனுகூலம் மற்றொரு வர்த்தகத்தை பாதிக்காதபடி பார்த்துக் கொள்ள வேண்டுமென்று அவர்சொல்லியிருக்கிறர். வர்த்தக ஒப்பந்தங்கள் ஏற்படும் பொழுது வர்த்தக சங்கங்களின் பிரிதி நிதிகளையும் கவர்ன்மெண்டார் கலந்து கொண்டு இவ்விதமான வித்யாசம் நேரிடாமலிருக்கும்படிக்கும் பொதுஜனங்களுக்கு இவற்றின் பலாபலனை தெரிந்து கொள்ள போதிய தகவலைத் தெரிவிப்பார்களென்று நம்புகிறோம். எவ்வளவுதான் விளை நிலங்களின் உற்பத்தி சக்தி அதிகரிக்கப்பட்டபோதிலும் விவசாயம் மட்டுமே நமது செல்வத்தை அதிகம் பெருக்கமுடியாது. இதனல் தேசத்தை துரிதமாகக் கைத்தொழிற் சாலைகள் மிகுந்த நாடாகச் செய்ய வேண்டியிருக்குமென்பது தலைவருடைய அபிப்பிராயம். ஆனல் கவர்ன்மெண்டாரும் முதல் போடுபவர்களது நலத்தையும் பாதுகாத்து வேண்டுவன செய்துகொடுத்தால் பலர் முன்வருவார்களென்பதில் ஆக்ஷேபணையிருக்காது பொருளாதார முன்னேற்றத்தைப் பற்றி திரு. லால்பாய் கீழ்கண்ட விதமாக அபிப்பிராயத்தை தெரிவிக்கிறர்:—

"ருஷ்யா, ஜப்பான் போன்ற தேசங்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தைப் பார்த்தால் மூலாதாரச் செல்வத்தில் மிகுந்து விளங்கும் இந்தியா அவற்றை விருத்தி செய்யும் விஷயத்தில் அடைந்துள்ள முன்னேற்றம் முன்னேற்றமே யாகாதென்று சொல்லிவிடலாம். பொருளாதார முன்னேற்றத்திட்டத்தின் அவசியம் நன்கு உணரப்பட்டிருக்கிறது. ஒரு லட்சியத்தை ஏற்படுத்தி அதனை அடைய ஒரு மித்த முறையில் முயற்சி செய்யா விட்டால் முன்னேற்றம் என்பது ஏற்படமாட்டாது." இந்தியாகளை கவனிக்கும்படியாக கேட்டுக்கொள்ளுகிறோம்.

* * *

# வியாபார முறை

(P. பரிமண பல்லவராயர்.)

நாம் இப்போது வியாபாரமுறை என்பதைப்பற்றிச் சிறிது எழுதலாமெனத் துணிந்தோம். எனினும், எண்ணி நாட்கள் பல ஆயின. அதற்குறிய நாள் இன்றே ஏற்படலாயிற்று. முன் எழுதிய கட்டுரைகளிலே வியாபார முறையைப் பற்றியும் எழுதியிருப்பது நேயர்கள் அறிந்திருக்கலாம். எனினும், சமீபத்தில் ஏற்பட்ட இரண்டொரு அநுபவங்களைக்கூறுவது வியாபாரச்சகோதரர்களுக்கு உதவியாயிருக்குமென எண்ணுகின்றோம்.

நாம் சமீபத்தில் திருச்சியிலே நமக்குத்தெரிந்த ஒருவரின் கடையிலே நின்று பேச்சோடுகூடக் கடையிலுள்ள சாமான்களைக் கவனித்துக்கொண்டிருந்தோம். அவைகளிலொன்று அட்டைப் பெட்டிகளானவை. அவை பார்ப்பதற்கு அழகாயும் பளபளப்பாயும் தகத்தகாயமாயும் கண்ணைக்கவர்ந்ததாயுமிருந்தன. அவைகளிலென்ன இருக்கின்றது—என்ன சாமான் என்றோம். அது பெருங்காயப் பாக்கெட் சென்னையிலிருந்து வந்தவை என்றார் கடைக்காரர். அது எவ்வளவு எடை, என்ன விலை என்றோம். அது ஒருபலமிருக்கும், இரண்டரையணா விலை என்றார். அந்தப்பாக்கெட்டின் ஜொலிஜொலிப்பையும், கண்கவர்மாட்சியையும் கண்ட நம் மனது அந்தப்பாக்கெட்டில் லயித்துவிட்டது. ஆனால் ஒரு பாக்கெட் கொடுங்கள் என்று வாங்கிக்கொண்டு, இரண்டரையணாவைக் கொடுத்துவிட்டு வீட்டுக்கு வந்தோம். அந்தப்பெட்டியைக் கண்டதுதான் தாமதம். பெண்களுக்கும் அதன் மேற்பகட்டு ஆச்சரியத்தை உண்டாக்கி, அதை உடனே கையிலெடுத்து என்னவென்று கேட்டுக்கொண்டே அப்பாக்கெட்டைப் பிரித்தும்பார்க்கலாயினர். பார்க்கவே, அது பெருங்காயமென்று தெரிந்தாலும் பிரியம் அதிகமாவதில் ஆச்சரியமில்லையல்லவா! ஆனாலும், அதனைக்கண்ணால் காணவே, இதென்ன, "ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம் உள்ளே இருக்குமாம் ஈரும்பேனும்" என்றபடி இருக்கிறதே என்றார்கள். என்ன என்று நாமும் அதனைக் கையில்வாங்கி பார்க்கவே, வெள்ளை வெளேரென்ற சிறுசிறு மரத்துணுக்குகள் கலந்தனவாய்க் குஷ்டம் கொண்டவர் போலிருந்தது. இது தான் இப்படியிருக்கிறதே, நிறை சரியாயிருக்கிறதாவென்று பார்ப்போமென்று நம்மிடம்—வீட்டிலிருந்த (தபாலாபீஸ்) தராசிலே நிறுத்தோம், முக்கால் பலமே இருக்கலாயிற்று. அன்றியும், அப்பெருங்காயத்தை ஓர் இலையிலேமடித்து அக்காகிதப்பெட்டிக்குள் வைத்திருந்திருக்கிறார்கள். அந்த இலையும் மொறுமொறு என்று நன்றாய்க் காய்ந்து போயிருந்தது.

இம்மாதிரி எடையிலும் நாணயமில்லாதிருக்குமாயின் எவர்தான் இப்படிப்பட்ட படாடோப—டாம்பீக—வெளிப்பகட்டு—வஞ்சக—மோசப் பொருள்களை வாங்கப் பிரியப்படுவர். ஒருக்கால் வேலைக்காரர்கள் அவ்விதம் கவனிக்காமல் செய்திருக்கக்கூடுமெனலாம். வேலைக்காரர்களுக்கு வேலையைக் கண்காணிப்பவரோ, முதலாளியோ, இவ்வித விஷயங்களில் முன்னெச்சரிக்கை செய்திருக்கவேண்டியது அத்தியாவசியமாகும். முன்னமேயே எச்சரிக்கை செய்திருக்கக்கூடுமெனினும், அடிக்கடி சமயம் நேர்ந்தபோதும் சந்தர்ப்பம் நோக்கி எச்சரிக்கை செய்யவேண்டியதே. இதனால் நன்மையேயன்றி நஷ்டமொன்றுமில்லை. வேலைக்காரர்களும் இவ்வித செயல்களினால், தம் முதலாளிக்குக் கெட்டபேரும் வியாபார வீழ்ச்சியும் நஷ்டமும் ஏற்படுமென்பதை மனதிலிருத்தித் தம் கடமையை—வேலையைச் செவ்வனே "நன்மை கடைப்பிடி" என்றபடி செய்ய எண்ணவேண்டும். இல்லையேல் முதலாளிக்கும் நஷ்டம் தமக்கும்-தொழிலுக்கும் (வேலையில்லாத்திண்டாட்டம்) கஷ்டம். ஏற்படுமென்பதை கவனித்தல் வேண்டும்.

ஆகவே வியாபாரமானது முதலாளி, தொழிலாளி இருவருக்கும் லாபமோ, நஷ்டமோ உண்டாகுமென்பது திண்ணம். முதலாளிக்கு லாபமானால் தொழிலாளிக்கும் லாபம், முதலாளிக்கு நஷ்டமானால் தொழிலாளிக்கும் நஷ்டம் என்பது எவரும் அறிந்ததாகும். நிற்க,

சமீபத்திலே நம் பொன்மலை ரயில்வே ஸ்டேஷனின் பிளாட்பாரத்திலுள்ள பக்ஷணக்கடையிலே நாம் நம் சொந்த ஊருக்குப் போகுங்கால், பிள்ளைகளுக்காக, அவர்கள் தகராறு செய்துகொள்ளாதிருக்கத் தனித்தனியாகக் காலணாப் பொட்டணங்களாக ஓமப்பொடியோ, காராப்பூந்தியோ, காராச்சேவோ ஒரு வகையில் பல பொட்டணங்கள் வேண்டுமெனக் கேட்குங்கால் பட்சணம் விற்பவர் கயிறில்லையென்றும், பல பொட்டணங்கட்டுவது சிரமமாயிருக்கின்றதென்றும், ஒரே பொட்டணமானால் கட்டித் தருவதாயும் பலதடவைகளில் சொல்லியிருக்கின்றார். இதனால் நாம் பிள்ளைகளின் தகராறை உத்தேசித்து ஒரே பொட்டணமாக அங்கு வாங்காமல் வேறிடங்களில்—போய்ச் சேருமிடத்தில்—வாங்கிச் செல்வது வழக்கமாகிவிட்டது.

முதலாவது, இக்கடைக்காரர் பொதுஜன சௌகரியத்துக்காகக்கடை வைத்திருக்கிறாரா, தன் சுய நன்மைக்காக மட்டும் கடை வைத்திருக்கிறாரா என்று கவனித்தால், முதலாவது தன் சம்பாத்தியத்துக்கும், இரண்டாவது பொதுஜன சவுகரியத்துக்கும் என்பதே எவரும் அறிந்தது. இரண்டாவது கடமை இவரது வியாபார நிபந்தனையில் அடங்கியிருக்கக்கூடியது என்றாலும், பக்ஷணங்கள் விற்பனையாகாவிட்டால் எனக்கல்லவா நஷ்டம் என்று வியாபாரி கூறலாம். கூறினும், பொதுஜன நன்மையையும் பெரிதாகக் கவனிப்போர்க்கே அப்படிப்பட்ட இடங்களில் ரயில்வே கம்பெனியார் அநுமதிப்பாரன்றி, ஏனையோர்க்கு அநுமதிக்கமாட்டாரென்பது எவரும் அறிந்ததல்லவா!

இரண்டாவது, நம்மிடம் இவ்விதம் பலதடவைகளில் கூறிவருபவர் கடையின் முதலாளிக்கு நெருங்கிய பந்துவாகவோ, சம்பளக்காரராகவோதான் இருக்கக்கூடும். எப்படியிருப்பினும், இவரது செயலினால் வியாபாரத்துக்கு ஒருசிறிது இடையூறு—குறைவுதானே. இதனால் முதலாளிக்கு நஷ்டந்தானே. முதலாளிக்கு நஷ்டமானால் தமக்கு நஷ்டமல்லவா! இப்படி வியாபாரம் செய்வோரும் சொல்ல நேருவதும், குறைவும் ஒருசிறிதுதானே இருக்கக்கூடும், பெரும்பான்மையோர் பொட்டணங்கட்டாமல் வாங்கிச் சாப்பிட்டுவிட்டுப் போவோராகத்தானே இருப்பர் எனலாம். எனினும், "பலதுளி பெருவெள்ளம்" என்பதும், "சிறுதுரும்பும் பல்குத்த உதவும்" என்பதும் இணையற்ற பழமொழிகள் அல்லவா!

எனவே, எத்தகைய வியாபாரிகளும், வியாபார சம்பளக்காரர்களும், வியாபார வேலைக்காரர்களும் இருசாராரின் நன்மை தீமைகளை—லாபநஷ்டங்களை

## சாரதா மில் திறப்பு விழா.

கோயம்புத்தூருக்கடுத்த போத்தனூரில் புதிதாகக்கட்டிமுடித்த ஸ்ரீ சாரதா மில்ஸ்; லிமிடெட் ஆலையின் கிரகப்பிரவேச விழா மே-மீ 9உ காலை கோவை காளீஸ்வரர் மில்லின் மானேஜிங் டைரக்டரும் சோமசுந்தரம் மில்லின் சொந்தக்காரருமான ஸ்ரீ பி. எஸ். சாத்தப்ப செட்டியாரால் நடத்தப்பட்டது. கோவையில் உள்ள பிரபல மில் சொந்தக்காரர்களும், பல பிரமுகர்களும் வந்திருந்தார்கள்.

மானேஜிங் ஏஜண்டு ஸ்ரீ V. S. செங்கோட்டைய்யா, ஸ்ரீ சாத்தப்ப செட்டியாருக்கு மில் டைரக்டர்களின் சார்பாக ஓர் வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்து, ஸ்ரீ செட்டியார் தென் இந்தியாவில் உள்ள மில்லுகளுக்கு எல்லாம் எவ்வாறு வழிகாட்டியாக இருக்கிறார் என்பதையும், நெசவு ஆலைகளுடைய நிர்வாகத்திறமையை எவ்வாறு அடைந்துள்ளார் என்பதைப் பற்றியும் விஸ்தாரமாக எடுத்துக் கூறினர்.

ஸ்ரீ சாரதா மில்லை ஆரம்பித்து வைக்கையில் ஸ்ரீ சாத்தப்ப செட்டியார் பேசியதாவது:-இந்த சந்தர்ப்பத்தையும் கௌரவத்தையும் எனக்குக் கொடுத்ததற்காக சாரதா மில்ஸ் நிர்வாகிகளுக்கு என் வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பஞ்சாலைகள் நிர்வகிக்கும் விஷயமாக எனக்குத்தெரிந்த ஓர் இரண்டு விஷயங்களைமட்டும் நான்கூற விரும்புகின்றேன். நமது நாட்டில் மில்லுகள் நிலைக்கு இருக்கும் என்பதில் ஆக்ஷேபனை இல்லை. கோவையைச் சுற்றிலும் இன்னும்பல மில்லுகள் ஏற்படும் என்பதிலும் சந்தேகம் கிடையாது.

சமீபகாலமாக இந்த ஜில்லாவில் இப்போதுள்ள மில்லுகள் ஏராளமாக

---

உணர்ந்து, தத்தம் கடமைகளைச் செவ்வனே தெரிந்து மேலே எடுத்துக்காட்டியபடி நடந்து நன்மையை நாடி உண்மைக் கருத்துடன் வியாபாரம் ஒங்கும் முறையில்—வழியில் தத்தம் கடமையைச்செய்து, "வணிகர்க்கழகு வளர் பொருளீட்டல்" என்ற உண்மைக்கு உரித்தாய்ச் செயல்புரிந்து சீரும் சிறப்பும் அடைந்துய்யுமாறுவேண்டுகின்றேன்

பத்திரிகை வியாபார ஏஜண்டுகளின் அநுபவங்களைப்பற்றி இன்னொருமுறை எழுதி விடுக்க விரும்பியிருக்கிறேன்.

---

## திருச்சி ஜில்லா வியாபாரிகள் சங்கம்.

18—5—35உ நடந்த 37-வது நிர்வாகக் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள்:—

1. மெம்பர்களின் எண்ணிக்கை 14.

2. சென்ற பங்குனி, சித்திரை மாத சங்க வரவு செலவு கணக்குகள் வாசித்து ஒப்புக்கொள்ளப்பட்டது.

3. புதிதாக வந்த கமிஷனரை நேரில் போய் பார்த்து அவருக்கு நல்வரவேற்பு பத்திரம் வாசித்து கொடுப்பதென தீர்மானிக்கபட்டது.

4. சந்தா வசூல் குறைந்து கொண்டே வருவதால் அந்த அந்த பக்கத்திலுள்ள நிர்வாக மெம்பர்கள் சந்தா வசூலிப்பவரோடு கூடயிருந்து வசூலிப்பதென ஒப்புக்கொள்ளப் பட்டது

5. சங்கத்தின் ஆண்டு விழா நடத்துவதற்காக சங்க வரவு செலவு கணக்குகளை ஆடிட்டரால் பரிசோதிக்கச் செய்து பொதுக்கூட்டம் ஒன்று வைத்து அதில் வாசித்துக் கொடுப்பதென ஏகமனதாக நிறைவேறிற்று.

---

லாபத்தை சம்பாதித்திருக்கின்றன. எனவே பல மில்லுகளில் தாராளமாக டிவிடெண்டுகள் கொடுக்க சாத்தியமாயிருந்தன. அதிக டிவிடெண்டைக் கொடுத்து வருவதைப்பொறுத்து ஒரு மில்லின் நிலைமை ரிசர்வ் நிதியைப் பொறுத்தே உள்ளது. எனவே ரிசர்வ் நிதிக்கு போதியபணத்தையும் இதர முக்கியமான விஷயங்களுக்கும் போதிய பணத்தையும் ஒதுக்கி வைக்கவேண்டும்.

ஸ்ரீ செங்கோட்டைய்யா & பிரதர்ஸ் திறமைசாலிகள் என்பதைச் சொல்ல வேண்டுவதில்லை. பிறகு ஸ்ரீ சாத்தப்ப செட்டியார் மில்லைத் திறந்துவைத்தார். மோட்டார்கள் ஓட்டப்பட்டு மில் வேலைசெய்ய ஆரம்பித்தது. திவான் பகதூர் C. S. இரத்தினசபாபதி முதலியார் எல்லோருக்கும் வந்தனம் கூறிய பின் சந்தனம் தாம்பூலம் வழங்கி விழா முடிவுக்கு வந்தது.

* * *

## நிக்கல் முலாம் போடும் விதம்.

இந்தக்காலத்தில் வெள்ளியைக்காட்டிலும் மதிப்புள்ளது நிக்கல். சாதாரணமாய் பித்தளை, வெள்ளி, இவைகளைப்போல் கருக்காது. நிக்கல் கில்ட் போடுவதற்குகூட தங்கமுலாம்போல் பேட்ரி வைத்து ஏற்றுவதுதான் உத்தமம். பீங்கான் பாத்திரம் ஒன்று எடுத்துக்கொள்ளவும். அதில் 100 பங்கு சுத்த ஜலம் வைத்துக்கொள்ளவும். இதில் 5-பங்கு நிக்கல் சல்பேட் (Nickle Sulphate) 5-பங்கு அமோனியம் சல்பேட் (Amonium Sulphate) 1½-பங்கு (Boric-Acid) இதுகளை போட்டு கரைத்துவிடவும். இப்பொழுது நிக்கல் ஜலம் தயாராய்விட்டது. நிக்கல்போட தயாராயிருக்கும் பாத்திரத்தை நன்றாய் முன்போல் சுத்தம் செய்யவேண்டியவிதம் முக்கியமானது. சாமான்கள் இரும்பு அல்லது எக்குவாயிருந்தால் 100 பங்கு ஜலம் 10 பங்கு கா சோடாபோட்டு காய்ச்சின ஜலத்தில் ஷெ சாமானைக் கொதிக்க வைக்கவேண்டியது. பிறகு எடுத்து பித்தளை பிரஷால் சுத்தம் செய்து பிறகு 1-பங்கு சல்பூரிக் ஆசிட் 2 பங்கு மொரடிக் ஆசிட் 10 பங்கு ஜலம் விட்டு கரைத்த ஜலத்தில் கொஞ்ச நேரம்வைத்து பிறகு மறுபடியும் பச்சை ஜலத்தில் சுத்தமாய் அலம்பவும். இரும்பில்லாமல் பித்தளை அல்லது செம்பு சாமான்களாக இருந்தால் காஸ்டிக் சோடா கரைத்த ஜலத்தில் போடுவது உத்தமம். பிறகு பித்தளைப் பிரஷால் பச்சை ஜலம் விட்டு நன்றாய் சுத்தம் செய்து உடனே பொடேசியம் சைனேட் கரைத்த ஜலத்தில் ஊறவைக்க வேண்டும் 8-அவுன்சு சைனேட்டுக்கு (4 quarts) ஜலம் கடைசியாக குளிர்ந்த ஜலத்தில் அலம்பி தேய்க்கவும். இந்த மாதிரி சாமானை சுத்தம் செய்தபிறகு ஷெ சாமானை நிக்கல் கரைத்த ஜலத்தில் போட்டுவைக்கவும்.

இப்பொழுது முன் சொன்னமாதிரி தயாரித்த பேட்டரி பக்கத்தில் ஷெ சாமானுடன் ஜலமுள்ள பாத்திரத்தை வைத்து ஒருகம்பியில் நிக்கல் தகடு ஒன்றும் இன்னொரு கம்பியில் ஷெ பாத்திரத்தையும் கட்டி விட்டுவிட்டால் 1மணி சவகாசத்திற்குள் நிக்கல் முலாம் ஷெ சாமானில் ஏறிவிடும். அப்பொழுது ஷெ சாமான் நீலவர்ணம் பாய்ந்தாற்போல் இருக்கும். பிறகு ஷெ சாமானை கொதிக்கும் வெந்நீரில்போட்டு பித்தளை பிரஷால் புங்கங்கொட்டை மெருகு மணல் இதுகளால் போட்டு தேய்க்க பாலீஷ் வந்துவிடும்.

# சாமான்களுக்கு ரயில்வே சார்ஜுகள். (RAILWAY RATES)

The Railway do not accept responsibility for the correctness of these quotations a reference should be made to the Local Rate Advices & Foreign Rate Circulars issued by the S. I. Ry.,

| சாமான்கள் | எங்கிருந்து | எந்த இடத்துக்கு | ரேட்டு மணங்குக்கு | | எந்த தேதியிலிருந்து | ஷரா |
|---|---|---|---|---|---|---|
| | | | அ. | பை | | |
| சிண்டர் | கள்ளிக்கோட்டை | தாசம்பட்டி | 2 | 4 | 4—5—35 | 30—4—36 வரை. |
| ,, | ,, | குளித்தலை | 2 | 2 | ,, | ,, |
| ,, | ,, | பேட்டவாத்தலை | 2 | 2 | ,, | ,, |
| ,, | ,, | சேலம் | 2 | 2 | ,, | ,, |
| ,, | ,, | தஞ்சாவூர் | 2 | 6 | ,, | ,, |
| ,, | சோரனூர் | ,, | 2 | 3 | ,, | ,, |
| ,, | ,, | திருமயம் | 2 | 4 | ,, | ,, |
| ,, | ,, | திருச்சி கூடுஸ் | 2 | 2 | ,, | ,, |
| ,, | ,, | எர்ணுகுளம் | 1 | 3 | 1—5—35 | ,, |
| ,, | ,, | கோயம்புத்தூர் | 1 | 6 | 25—4—35 | 30—4—36 ,, |
| ,, | ,, | காரமடை | 1 | 6 | ,, | ,, |
| ,, | ,, | போதனூர் | 1 | 6 | ,, | ,, |
| ,, | ,, | துடியலூர் | 1 | 6 | ,, | ,, |
| மூங்கில் | திருச்சூர் | எர்ணுகுளம் | 0 | 9 | 1—7—35 | |
| முந்திரி பருப்பு | மங்களூர் | திருச்சூர் | 4 | 4 | 10—5—35 | |
| ,, | அஜிக்கல் | எர்ணுகுளம் | 6 | 9 | 15—5—35 | |
| ,, | கள்ளிக்கோட்டை | ,, | 4 | 0 | ,, | |
| ,, | இரிஞ்சாலக்குடா | ,, | 1 | 11 | ,, | |
| ,, | ஒலவக்கோடு | ,, | 3 | 10 | ,, | |
| ,, | ஒட்டபாலம் | ,, | 3 | 4 | ,, | |
| ,, | பரலி | ,, | 3 | 8 | ,, | |
| ,, | திருச்சூர் | ,, | 1 | 9 | ,, | |
| ,, | அங்காடி புரம் | ,, | 4 | 2 | ,, | |
| ,, | செருக்காரா | ,, | 3 | 10 | ,, | |
| ,, | மெலட்டூர் | ,, | 4 | 8 | ,, | |
| ,, | நிலாம்பூர் ரோடு | ,, | 5 | 10 | ,, | |
| ,, | துவ்வூர் | ,, | 4 | 11 | ,, | |
| ,, | வல்லபூழா | ,, | 3 | 7 | ,, | |
| ,, | வாணியம்பலம் | ,, | 5 | 4 | ,, | |
| நிலக்கரி | எர்ணுகுளம் | திருச்சூர் | 0 | 7 | 27—4—35 | 26—4—36 ,, |
| சென்ன இலை | பாளையங்கோட்டை | தூத்துக்குடி | 2 | 3 | 20—4—35 | 31—7—35 ,, |
| விறகு | அங்காடி புரம் | ஆல்வாய்க்கும் எர்ணுகுளத்துக்கும் | 1 | 5 | 15—4—35 | 14—4—36 ,, |
| ,, | மெலட்டூர் | | 1 | 5 | ,, | ,, |
| ,, | நிலாம்பூர் ரோடு | | 1 | 5 | ,, | ,, |
| ,, | வாணியம்பலம் | | 1 | 5 | ,, | ,, |
| ,, | மாம்பலபட்டு | சென்னை பீச் | 3 | 0 | 15—5—35 | |
| ,, | முண்டியம் பாக்கம் | | 3 | 0 | ,, | |
| ,, | பேரணி | | 3 | 0 | ,, | |
| ,, | விக்ரவாண்டி | | 3 | 0 | ,, | |
| ,, | சாலக்குடி | எர்ணுகுளம் | 0 | 6 | 1—7—35 | |
| ,, | இரிஞ்சாலக்குடா | ,, | 0 | 6 | ,, | |
| மாவு | எர்ணுகுளம் | திருச்சூர் | 1 | 3 | 1—7—35 | |
| வாழைப்பழம் | எலமனூர் | சென்னை எழும்பூர் | 5 | 6 | 1—4—35 | 31—3—36 ,, |
| ,, | கரூர் | ,, | 6 | 0 | ,, | |
| ,, | குளித்தலை | ,, | 5 | 8 | ,, | |
| ,, | லாலாபேட்டை | ,, | 5 | 9 | ,, | |
| ,, | மாயனூர் | ,, | 5 | 10 | ,, | |
| ,, | பெருகமணி | ,, | 5 | 6 | ,, | |
| ,, | புகலூர் | ,, | 6 | 2 | ,, | |
| ,, | திம்மாச்சிபுரம் | ,, | 5 | 9 | ,, | |
| ,, | திருச்சி கூடுஸ் | ,, | 5 | 2 | ,, | |

## ரயில்வே தகராறு.

விருதுநகர் வியாபாரிகளுக்கும் தென் இந்திய ரயில்வே கம்பெனிக்கும் தற்போது தகராறு ஏற்பட்டு இவ்வூர் இறக்குமதி யாவும் நின்றுவிட்டது. இறக்குமதி வியாபாரிகள், தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து நகருக்கு சரக்குகள் இறக்குமதியாகும் விஷயத்தில் பல வருடங்களாக கம்பெனியாரிடம் 'ரெடியூஸ்டு ரேட்' விகிதம் கோரி வந்தார்களென தெரிகின்றது. ஆனால் இவ்வூருக்கு பிரஸ்தாப குறைந்த விகிதத்தை கொடுத்தால் மதுரை இறக்குமதி குறையுமென்ற நோக்கத்துடன் இதை அடியுடன் மறுத்து வந்திருக்கின்றார்களாம். வியாபார மந்தமான இப்போது மேற்படி விகிதம் இவ்வூர் வியாபாரிகளுக்கு இல்லாதிருப்பதால் அயலூர் கிராக்கிகள் குறைய ஆரம்பித்தனவாம். எப்படி எனில் ரெடியூஸ்டு விகிதம் பெற்றுள்ள தூத்துக்குடி, கோவில்பட்டி, சாத்தூர், சிவகாசி ஆகிய இவ்வூருக்கு தெற்கே உள்ள ஊர்களிலுள்ள வர்த்தகர்கள் இவ்வூர் விலைவாசிக்கு குறைவாக விலை கூற இடம் ஏற்பட்டது. அதற்கு காரணம் ரெடியூஸ்டுரேட். இதில் கிடைக்கும் லாபத்தின் ஒரு பகுதியை அவ்வூர் வியாரிபாகள் விலைகளில் விட்டுக்கொடுத்தார்கள். இதனால் நகர் ஏற்றுமதி குறைந்து வியாபாரிகள் பலர் மற்ற ஊர்களுக்கு கும்பல் கும்பலாய் சென்று குடியேறினார்கள், இது விஷயமாக கிளர்ச்சி செய்த வியாபாரிகள் தற்போது மிக கட்டுப்பாடான நிலைமையில் இவ்வூர் இறக்குமதி முழுவதையும் நிறுத்திக் கொண்டார்கள்.

தூத்துக்குடியிலிருந்து சகல இறக்குமதி சரக்குகளையும் ரெடியூஸ்டுரேட் விகிதம் பெற்றுள்ள சாத்தூருக்கே பதிவு செய்து அங்கு இறக்கிக்கொள்கின்றார்கள். அங்கிருந்து இரட்டை மாட்டு வண்டிகளில் சரக்குகளை இங்கு கொண்டுவருகின்றார்கள். இதன் மூலம் 2000 வண்டிகளுக்கு தினந்தோறும் பிழைப்பு ஏற்பட்டிருக்கின்றது. தூத்துக்குடியிலிருந்து சாத்தூருக்கு ரெடியூஸ்டு ரேட் விகிதப்படி மணங்குக்கு 2 அணா, விருதுநகருக்கு பிரஸ்தாப விகிதமில்லாமல் 3 அணா 5 தம்பிடி ஆனால் விருதுநகர் வந்து திரும்பவும் செங்கோட்டை லயன் மார்க்கமாக சிவகாசிக்கு செல்ல ரெடியூஸ்டு ரேட் இருப்பதால் அவ்வூருக்கு மணங்குக்கு 2 அணா 3 தம்பிடி.

வியாபாரிகள் இதைத்தான் தற்போது ஆட்சேபித்து கிளர்ச்சி செய்கின்றார்கள். சாத்தூரில் சரக்குகளை இறக்கி மாட்டு வண்டிகள் மூலம் இங்கு கொண்டுவருவதில் பலத்த சிரமமிருந்தாலும், அதில் கிடைக்கும் சொற்ப லாபத்தை கருதிக் கொண்டே வியாபாரிகள் கூட்டுறவு தீர்மானத்தின்படி இறக்குமதி பகிஷ்காரத்தை தொடர்ந்து செய்து வருகின்றார்கள். ஏற்கனவே சரியான ஏற்றுமதி இல்லாமல் மங்கிக்கிடந்த நகர் கூட்ஸ் ஷெட் தற்போது இறக்குமதியே இல்லாமல் உறங்குகின்றதென கூறுவது மிகையாகாது.

## வர்த்தகர்கள் கூட்டம்.

ஸ்ரீமான்கள் ஷண்முகசுந்தரம் நாடார் அய்யம் பெருமாள் நாடார், ராமசாமி நாடார் ஆகியவர்கள் கம்பெனியார் இவ்வூர் வியாபாரிகளுக்கு ரெடியூஸ்டு ரேட் கொடுக்கவேண்டிய அவசியம்பற்றி விரிவாக பேசினார்கள். இவ்வூருக்கு ரேட் கொடுத்தால் மதுரை இறக்குமதி குறையுமென கருதுவதால் இரு ஊர்களுக்கும் சொற்ப ரேட் கொடுத்தால் கம்பெனிக்கு எவ்வித நஷ்டமும் ஏற்படாதென்றும் அதன் மூலம் விருதுநகர், மதுரை வியாபாரம் பெருகி இறக்குமதியும் ஏற்றுமதியும் அதிகமாகி கம்பெனிக்கு லாபமே கிடைக்குமென்றும், தற்போது நாட்டு வண்டிகளில் வருவதால் தங்களுக்கு 4 பைசா மணங்குக்கு லாபமிருக்கின்றதென்றும், இதன் மூலம் கம்பெனிக்கு ஏராளமாய் நஷ்டம் ஏற்படுவதை கவனியாது இருப்பதுடன், வியாபாரிகளின் வேண்டுகோளை புறகணித்தே செல்லுவதானது ஏற்கனவே நொந்துள்ள வியாபாரிகளுக்கு வர்த்தக உலகத்தை பற்றி பெரும் பயங்கரமாகத் தோன்றச் செய்வதாகுமென்றும் பேசினார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் தலையிட்டு தக்கன செய்ய வேண்டுமென்றும், வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள காரியதரிசிக்கு அதிகாரம் கொடுப்பதென்றும், தூது கோஷ்டி ஒன்றை அனுப்ப விரைவில் ஏற்பாடு செய்வதென்றும் தீர்மானங்கள் நிறைவேறின.

இந்த பகிஷ்காரத்தின் மூலம் நகரிலுள்ள நாட்டு வண்டிகளுக்கும் சாத்தூர் தாலூகாவிலுள்ள வண்டிகளுக்கும் நல்ல பிழைப்பு ஏற்பட்டிருக்கின்றது. 2000 விவசாயிகள் சாத்தூரிலிருந்து விருதுநகருக்கு பாரத்துடன் வண்டிகளை ஓட்டிக்கொண்டு வரும் காட்சி அலங்காரமாகவே இருக்கின்றது.

---

## பத்திரிகைகளின் வரவு.
(Publications Received)

London Chamber of Com-
Indian Mirror [merce Journal
Indian Finance
Barclays Bank Monthly
Industry [Review
Barclays Bank monthly Trade
Indian Soap Journal [Cables
The Travancore Government
Celestial Messenger [Gazette
West minster Bank Review
South Africa Standard Bank
Business Educator [Review
Indo-Malaya Review
Railway Herald
The Commercial Bullettin of
The Prince [South Africa
Mysore Chamber of
Guardian [Commerce Bullettin
The Cochin Government Ga-
Liverpool Trade Review [zette
The Commercial Review
Commercial Tit Bits of India
Commerce & Industry
Economic News
World Trade
The Raj Herald
Vijaya
Jaina Gazette
Circulaire Commerciale
Journal Officiel
Monthly Summary of the Na-
Index [tional Bank of Australia

| | |
|---|---|
| அமிர்தகுணபோதினி | தேசநேசன் |
| ஆர்யதர்மம் | திராவிட கேசரி |
| ஆனந்தபோதினி | தமிழ்நாடு |
| இந்தியதாய் | தமிழன் |
| இந்திய கேசரி | நகரதூதன் |
| ஈழகேசரி | பாரிஜாதம் |
| கவிதாமண்டலம் | ப்ரஸன்னலக்ஷ்மி |
| குமரன் | மநுதர்மம் |
| குடி அரசு | மிராசுதார் |
| குமார விகடன் | வம்பன் |
| சன்மார்க்கப்ரதர்சினி | வசந்தவிகடன் |
| சினிமா டாக்கீஸ் | விதூஷகன் |
| சித்தர் களஞ்சியம் | விசித்திரன் |
| சுதந்தரவீரன் | விஸ்வபந்து |
| சுதேசநாட்டியம் | விநோதன் |
| செங்குந்த மித்ரன் | விஜயபாரதி |
| சோதிடபரிபாலினி | ஜகன்மோகினி |
| தமிழ்த்தாய் | ஞானபோதினி |
| திருச்சி வர்த்தமானி | |
| திருவாங்கூர் அபிமானி | |
| திருக்குறட் குமரேச வெண்பா | |

# REVIEWS. மதிப்புரைகள்.

### இந்திய கேசரி

இலங்கையிலிருந்து "திரிலோக சஞ்சாரி" என்ற நாமத்துடன் இதுகாறும் வெளிவந்த பத்திரிகையின் பெயரை மாற்றி அரசர் பெருமான் வெள்ளிவிழாமுதல் **இந்திய கேசரி** என்ற பெயருடன் வெளிவருகின்றது. இப்பத்திரிகை இந்திய மக்களுக்கே உழைப்பதும், எல்லோரையும் சமநிலைமைக்குக்கொண்டுவர வேண்டியதே முக்கிய கொள்கையாகக்கொண்டிருக்கிறது. வெள்ளிவிழாவின்பொழுது வெளியிட்ட புத்தகம் 1 இலக்கம் 44. பத்திரிகையில் சென்னை மாகாணத்தலைவர்களின் படங்களும் பல கட்டுரைகளும் அச்சிடப்பட்டிருக்கிறது. போதிய அனுபவம் வாய்ந்த திருவாளர்கள் G. B. வேதநாயகம் K. சுப்பிரமணியம் இதன் ஆசிரியர்களாகயிருந்து நடத்திவருவதால் பத்திரிகை எல்லா விஷயங்களிலும் தலைசிறந்து விளங்குமென்று நம்புகிறோம். இந்தியமக்கள் பத்திரிகையை ஆதரிக்கும்படியாக கேட்டுக்கொள்ளுகிறோம்.

### தமிழ்த்தாய்

திருநெல்வேலியிலிருக்கும் சென்னைமாகாண தமிழ் சங்கத்திலிருந்து மூன்று திங்களுக்கு ஒருமுறை வெளிவரும் **தமிழ்த்தாய்** பத்திரிகையின் மாலை 1. மலர் 1, 2, 3, கிடைக்கப்பெற்றோம். தமிழ்மொழியிலுள்ளனவும் உலகமுற்போக்குக்கு இன்றியமையாது வேண்டப்பெறுவனவுமாகிய அரிய பெரிய உண்மைகளை உலகம் அறியும்படி பரவச்செய்வதும், பிறநாட்டுமக்கள் காணும் உண்மைகளைத் தமிழில் எழுதி தமிழ்மக்கள் அறியும்படிசெய்வதும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். இப்பத்திரிகைகளில் பல கட்டுரைகள் வெளியாகியிருப்பதுடன் பூதநூல் (Physics) கலைச்சொற்கள் (Physiology and Hygiene) இவைகளின் ஆங்கில பதில்களுக்கு தமிழ் மொழிகள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. தமிழ் வளர்ச்சியில் ஆர்வம்கொண்டவர்களுக்கு மிகவும் பயன் தரக்கூடியது. வருடசந்தா ரூ. ஒன்று.

### இந்திய தாய்.

**இந்தியதாய்** பத்திரிகையின் மலர் 2. இதழ் 5. பிரதியொன்று கிடைக்கப்பெற்றோம். இந்த இதழ் அரசர் பெருமானின் வெள்ளிவிழா ஞாபகார்த்தமாக வெளியிடப்பட்டிருக்கிறது. மதுரை ராமநாதபுரம் ஜில்லாக்களின் சரித்திர சம்பந்தமான கட்டுரைகள், சேத்தூர் ஜமீன்தார் அவர்கள் வம்சத்தைப் பற்றிய விபரங்கள், மற்றும் பிரபலஸ்தர்களுடைய சரிதைகளையும் பலபடங்களுடன் பிரசுரிக்கப்பட்டிருப்பதால் பார்வைக்கு அழகாயிருக்கிறது.

### சாயத்தொழில் மாணவன்.

திரு. மே. சக்கரவர்த்தி அவர்களால் எழுதிவெளியிடப்பட்ட **சாயத்தொழில் மாணவன்** என்னும் புஸ்தகத்தில் துணிகளுக்கு சாயம் போடும் விதத்தையும் அவைகளில் அச்சடிக்கும் விதத்தையும் வெகு விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதற்கு சௌகரியமான புஸ்தகம். இந்த தொழிலை பலரும் பயின்றால் தொழின்முறை வாழ்வுக்கும் பிற குடித்தன முறைக்கும் எவ்வளவோ நலத்தையும் பொருளாதாரத்தையும் கொடுக்கும். ஆரம்ப பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்கு போதனை செய்தால் அவர்களுடைய பிற்கால வாழ்வுக்கு ஒரு தகுந்த ஜீவனோபாயமாகுமென்பதில் சந்தேகமில்லை. இதன் விலை அணா நான்கு. கிடைக்குமிடம்:- மே. சக்கரவர்த்தி நாயனார், குழப்பலூர், ஆரணி மார்க்கம், வடஆற்காடு ஜில்லா.

### *Ink Powders*

We have received the Sample packets of Black, Blue Black & Red Ink powders, from Mail Order Company,, Manufacturers Jalalpur (Fyzabad) The preparations are in no way inferior to similar such articles.

### *Oriental Report for 1934.*

The Annual Report for 1934 issued by The Oriental Government Security Life Assurance Co., Ltd., the popular Indian Life Office, is an interesting document which records the uninterrupted progress made by the Company last year. Ever since its inception 61 years ago the Oriental has written a record business year after year. During 1934 the Company issued 42,378 Policies assuring over Rs. 762 lakhs, showing an increase of 4,187 Policies and Rs. 58 lakhs in Sums Assured on the figures of the previous year and constituting a record for the Company. In spite of this gigantic growth in the volume of its business the expense ratio is as low as 23. 0 per cent.

The Company's Claim Experience continues to prove very satisfactory and although the Claims by Death during the year of account at Rs 49½ Lakhs show an increase of Rs. 5 lakhs on the previous year's figure, the Ratio of the Actual Deaths to the Deaths Expected and provided for by the Mortality Basis adopted at the last Valuation was only 52.1 per cent. The Company's investments in Stock Exchange Securities continue to remain valued in the Books on the basis of a Gross Interest Yield of 5 per cent per annum The average Rate of Interest realized during the year was 5 per cent.

We have watched with great pleasure the rapid development of the Company's agency system in South India. An Office of the Company was opened at Coimbatore last year and about a month ago a Sub-Branch Office came into existence at Madura, both under the control of the Trichinopoly Branch. We have nodoubt that under the energetic and enthusiastic control of Mr. S.M. Krishnaswami the Branch Secretary, the two new Offices will in course of time develop into Branches giving a larger contribution of New Business to the Company.

***The Raj Herald***

The Silver Jubilee Number of the Raj Herald Lucknow contains number of articles in English, Hindi & Urdu by eminent personalities as Khan Bahadur Nawab Ahmad Hasan Khan, Dr. Nandlal Chatterjee M. A. & others. Dr. Rabindranath Tagore has also contributed a poem. It is neatly printed and is priced Rupee one.

***Black Hair Oil***

We acknowledge receipt of a bottle of the Black Hair Oil. It is stated that, by constant application, it changes the white hair into Black, stops growth of white hair and helps the head skin to produce black hair permanently. It has other qualities such as cooling the brain and scalp, develops eyesight etc., etc., It is priced annas twelve for 4 oz. bottle & is available from A. R. Shaikh, Mandvi, Surat.

***Cigarettes:-***

The samples of Regal & U. S. C. Special Cigarettes sent by the Upper Sind Cigarettes Manufacturing company are the best in quality among the Indian Cigarettes in the Market. The prices also are cheap. They can be had from the said Company at Post Box No. 30 Sukkur Sind, India.

***The Young Salesman's Hand Book.***

Mr. John. C. Bolton, one of the directors of Van den Berghs Limited and who has put innumerable young salesmen on the right road, has written by his practical experience over a farily lengthy period *the young Salesman's Hand Book.* This is one of the best books to give instructions to those, who are setting out for the first time to sell goods. Any salesman who studies this book will go out well prepared for his Job. It is priced Sh. 2/6 & is available from the publishers:— The Efficiency Magazine, Kent House 87, Regent St, London W. 1.

***From Wrong Angles***

This is a collection of humorous skits by the author which appeared in a number of journals especially the "Indian Finance" for over ten years. The book affords pleasant reading and is a welcome addition to the Indo-English literature in India. Literature of a humorous kind in India is scarce and G. L. M. has set a good example to Indian writers to turn their attention to this new field. "From Wrong Angles" ought to be "From Humorous Angles" The author seems to have been diffident when choosing the title. As the author says, while others resort to exhortation or denunciation or argument, the humorist simply draws attention to the incongruity of the situation; because he looks at the matter from another and a radically different angle. But if a sense of humour is an intellectual discipline these are often the only right angles to look from, and these are not necessarily "wrong angles" The book is priced Rs 1—8—0 & is well got up. It can be had of the author Mr. Gaganvihari Mehta, 70 A. Chakrabere Road (North) Calcutta.

***Canadian Trade.***

During the past two years the value of Canadian exports to Empire countries is stated to have increased by 118 million dollars, of which total 92 million dollars has been in the form of increased exports to Great Britain, 26 million dollars in increased exports to other parts of the Empire and 41 million dollars in exports to non-Empire countries, an aggregate increase amounting to 159 million dollars.

***Italy withdraws Silver***

All silver coins will be withdrawn from circulation in Italy and replaced by coins of a cheap white metal, according to a decree with the object of enabling the Government to take advantage of the high price of silver and obtain larger reserves of foreign currencies.

## மார்க்கட் நிலவரம்.
(Trichy Market Report.)

திருச்சி மே-மீ 25உ

| தங்கம் வெள்ளி | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| சவரன் | 22 | 12 | 0 |
| வெள்ளி ரூபா எடை | 0 | 13 | 9 |
| **மளிகை** | | | |
| பச்சரிசி 50-படி மூ. 1-க்கு 10-முதல் | 11 | 0 | 0 |
| புழுங்கல் அரிசி மூ. 8-முதல் | 8 | 8 | 0 |
| பழையநெல் 50-படி மூ. 1க்கு | 4 | 12 | 0 |
| புதிய சம்பா 50 படி | 4 | 4 | 0 |
| துவரம்பருப்பு 56 படி நயம் | 13 | 4 | 0 |
| உளுந்து 60 படி 11-0-0 மு | 13 | 0 | 0 |
| சாத்தூர் மிளகாய் ம 1-க்கு | 4 | 6 | 0 |
| நெய் முதல்தாம் ம 1-க்கு | 16 | 0 | 0 |
| **எண்ணெ** | | | |
| நல்லெண்ணெ ஆடம் 1-க்கு | 9 | 8 | 0 |
| விளக்கெண்ணெ ,, | 7 | 4 | 0 |
| தேங்காய் எண்ணெ ,, | 6 | 0 | 0 |
| கடலெண்ணெ ,, | 6 | 8 | 0 |
| **சோப் தினுசுகள்** | | | |
| 8-அவுன்ஸ் சன்லைட் ட. 1-க்கு | 1 | 8 | 6 |
| வினேலியா ஓயிட்ரோஸ் பெட்டி 1-க்கு | 0 | 14 | 0 |
| பியர்ஸ் சோப் டஜன் ,, | 3 | 9 | 0 |
| மைசூர் சந்தன சோப் ,, | 0 | 11 | 0 |
| ஓவல்டைன் 1 பவுன் டப்பி | 2 | 1 | 6 |
| ஷை ½ ,, | 1 | 3 | 0 |
| **தீப்பெட்டி** | | | |
| வெட்டும்புலி குரோஸ் 1-க்கு | 1 | 15 | 6 |
| கோல்டுபிலேம் ,, | 1 | 15 | 0 |
| **சிமெண்டு** | | | |
| கை மார்க் பீப்பா 1-க்கு | 11 | 12 | 0 |
| ஷை 1-அந்தர் மூ ,, | 3 | 0 | 0 |
| ஷை 94-ராத்தல் ,, | 2 | 8 | 0 |
| நீலகிரி 1 அ மூ 112 பவுன் | 2 | 10 | 0 |
| ஷை 94 ,, | 2 | 3 | 0 |
| **தானியங்கள்** | | | |
| ரங்கூன் தட்டப்பயிர் படி 5½ | 1 | 0 | 0 |
| நாட்டு உளுந்து படி 5½ | 1 | 0 | 0 |
| வயல் உளுந்து படி 7 | 1 | 0 | 0 |
| பாசிப்பயிறு 5½ படி | 1 | 0 | 0 |
| பச்சைப்பயிறு 9½ படி | 1 | 0 | 0 |
| குத்துக்கடலை படி 7 | 1 | 0 | 0 |
| கடலைப்பருப்பு 6½படி | 1 | 0 | 0 |
| துவரம்பருப்பு பருப்பு 4½ | 1 | 0 | 0 |
| மல்லி படி 9½ | 1 | 0 | 0 |
| கொட்டைமுத்து படி 6½ | 1 | 0 | 0 |
| கொள்ளு படி 7¼ | 1 | 0 | 0 |
| கம்பு படி (1) 10 (2) 9 | 1 | 0 | 0 |
| கேழ்வரகு படி 9½ | 1 | 0 | 0 |
| சோளம் படி 9 | 1 | 0 | 0 |

## நாணய மாற்றம்.
Exchange (31—5—35)

| | பென்சு |
|---|---|
| பாங்ரேட் லண்டன் தந்தி | 18 1/16 |
| பாங்ரேட் லண்டன் தரிசனம் | 18 1/16 |
| லண்டன் தந்தி விற்கிற விலை | 18 3/32 |
| தரிசன உண்டி விற்கிற விலை | 18 3/32 |

லண்டன்—அமெரிக்கா மேல் தந்தி ஸ்டர்லிங் பவுன் 1-க்கு டாலர் 4-93⅞

பாரிஸ் லண்டன் மேல் தந்தி ஸ்டர்லிங் பவுன் 1-க்கு பிராங்கு 75$\frac{1}{16}$

பிரான்ஸ் மேல் தரிசன உண்டி விற்பனை ரூ. 100-க்கு பிராங்கு 550

ஜர்மன் தரிசன உண்டி விற்பனை ரூ. 100-க்கு மார்க்கு 85

அமெரிக்கா தரிசன உண்டி விற்பனை டாலர் 100-க்கு ரூ. 274

அமெரிக்கா தரிசன உண்டி வாங்குவது டாலர் 100க்கு ரூ. 262

சிங்கப்பூர் தரிசன உண்டி விற்பனை டாலர் 100-க்கு ரூ. 157

சிங்கப்பூர் தரிசன உண்டி வாங்குவது டாலர் 100-க்கு ரூ. 150

ஹாங்காங் தந்தி அல்லது தரிசன உண்டி விற்பனை டாலர் 100க்கு ரூ. 175

ஷாங்காய் தந்தி அல்லது தரிசன உண்டி விற்பனை டாலர் 100க்கு ரூ. 125

ஜப்பான் அல்லது தந்தி தரிசன உண்டி விற்பனை என் 100-க்கு ரூ. 81

ஜாவா தந்தி அல்லது தரிசன உண்டி விற்பனை ரூ. 100-க்கு கில்டர் 50

| | | | |
|---|---|---|---|
| கடுகு படி 4¼ | 1 | 0 | 0 |
| சீரகம் மணங்கு 1-க்கு | 7 | 0 | 0 |
| மிளகு ,, | 6 | 8 | 0 |
| புளி ,, | 1 | 6 | 0 |
| மஞ்சள் ,, | 2 | 4 | 0 |
| ஜிஞ்சர் 1 நெ. | 3 | 4 | 0 |
| 2 நெ. | 2 | 8 | 0 |
| **காய்கறிகள்** | | | |
| கத்திரிக்காய் வெளியூர் மூட்டை 1 8 0 முதல் | 1 | 12 | 0 |
| முருங்கக்காய் மூட்டை 1-க்கு | 2 | 8 | 0 |
| பச்சை மிளகாய் மூ 1க்கு 7மு | 9 | 5 | 0 |
| வெண்டைக்காய் 1 8 0 மு. | 1 | 12 | 0 |
| வாழைக்காய் மொந்தன் 1000 | 3 | 2 | 0 |
| 1-நெ. ரஸ்தாளி 1000 | 4 | 8 | 0 |
| 2-நெ. ஷை 1000 | 3 | 8 | 0 |
| 1-நெ. பூவன் தார் 1-க்கு | 0 | 6 | 0 |
| 2-நெ. ஷை | 0 | 5 | 0 |
| தேங்காய் பெரியது 100 | 4 | 0 | 0 |
| ,, சிறியது 100 | 3 | 0 | 0 |
| உருளைக்கிழங்கு 7½ மணு | | | |
| 1-நெ, மூட்டை 1-க்கு | 11 | 0 | 0 |
| 2-நெ. ,, | 9 | 12 | 0 |
| 3-நெ. பொடி | 8 | 0 | 0 |

## கப்பல் செய்தி
(Shipping News.)

சென்னை துறைமுகம்.

| கப்பல் பெயர். | எதிர்பார்க்கும் தேதி | |
|---|---|---|
| சார்லஸ் | ஜூன் | 1 |
| கிளான்மக்லீன் | | 1 |
| பார்பாரிகோ | | 1 |
| வால்பி | | 1 |
| இசிபின்கோ | | 1 |
| ரோஹனு | | 1 |
| கோல்கொண்டா | | 1 |
| சிட்டி ஆப்சுவன்ஸ்வல்லி | | 2 |
| மகஞுத் | | 3 |
| இரின்புரா | | 3 |
| சில்வர்பீச் | | 3 |
| நாக்பூர் | | 4 |
| நூர்ஜஹான் | | 8 |
| டிராடன்பெல்சு | | 9 |
| தலம்பா | | 10 |
| கிளான்மக்பர்லேன் | | 11 |
| பார்ஜோரா | | 11 |
| ஜரைல்மெட்ஜிங்கர் | | 11 |
| குரோஹிமாரு | | 13 |
| சுமத்ரா | | 14 |
| கிளான்மக்படைன் | | 14 |
| மக்டாபூர் | | 15 |
| ரஜூலா | | 15 |
| கதியவார் | | 15 |
| மிர்ட்டில்பாங்கு | | 17 |
| இரின்புரா | | 17 |
| மோடாசா | | 18 |
| கோம்பேன் | | 19 |
| நியூஆர்லியன்சு | | 21 |
| மகாராஜா | | 21 |
| ஹூக்கர்க | | 23 |
| மசோபா | | 23 |
| பர்ஜோரா | | 25 |
| கிளான்மன்ரோ | | 28 |
| மார்க்ஹார் | | 29 |
| ரோஹனு | | 29 |

வர்த்தக நண்பர்களே!
உங்கள் வர்த்தகம்
விருத்தியடைந்து நீங்கள்
லாபமடைய விரும்பினால்
"வர்த்தக
ஊழியனில்"
விளம்பரம்
செய்யுங்கள்.

# ORIENTAL

## GOVERNMENT SECURITY LIFE ASSURANCE CO., LTD.

INCORPORATED IN INDIA 1874. HEAD OFFICE:—BOMBAY.

## SOME JUBILEE RECORDS.

### SILVER JUBILEE YEAR - 1899.

NEW ASSURANCES Rs. 63,71,990 PREMIUM INCOME Rs. 27,47,561 TRIENNIAL PROFITS Rs. 8,38,200

### GOLDEN JUBILEE YEAR - 1924.

NEW ASSURANCES Rs. 2,37,34,125 PREMIUM INCOME Rs. 83,63,906 TRIENNIAL PROFITS Rs. 51,04,597

### DIAMOND JUBILEE YEAR - 1934.

NEW ASSURANCES Rs. 7,62,42,761 PREMIUM INCOME Rs. 2,39,48,172 TRIENNIAL PROFITS Rs. 1,51,37,441

The Growth in Popularity and Profit Earning Capacity of the Company is Graphically Displayed by these Records.

**DO NOT DELAY TO INSURE YOUR LIFE WITH THIS POPULAR AND PROGRESSIVE INDIAN LIFE OFFICE BUT WRITE FOR FURTHUR PARTICULARS TO:—**

The Branch Secretary,

ORIENTAL LIFE OFFICE, TRICHINOPOLY.

OR TO ANY OF THE COMPANY'S OFFICES OR REPRESENTATIVES.

# REPORT OF LONDON CHAMBER.

The fifty-third report of the Council, which was presented to members of the London Chamber of Commerce at the annual general meeting on May 22, contains as usual an interesting commentary on world economic conditions.

The introduction says:—

World trade, which, according to the League of Nations, had already by 1933 fallen to approximately one-third of its 1929 value, fell still further in 1934. A nation which, before the war, found itself at the end of its financial year unable to meet its obligations to the rest of the world, could rely upon being lent the difference by England. Nations therefore piled debts on debts without great apprehension.

This state of affairs has, how ever, very largely ceased. In the absence of the willing lender, it suddenly became urgently necessary for each nation to bring its current credits and debits into line. This meant for most of the nations that they must try either to increase their exports or decrease their imports. The increased exports of one nation must, however, result in increased imports by others, and as no nation was prepared to accept increased imports, and used tariffs, quotas, etc., to prevent their entry, the way of escape by increasing exports was blocked and nothing remained but to decrease imports. Decreased imports by one nation imply decreased exports by others, and so the total volume of world trade is steadily being dried up.

In the year under review the United states, which as a great creditor country should have been prepared to import more goods than she exported, sold, on the contrary, £ 80,000,000 of goods more than she bought. This meant that far from taking, in the form of goods and services, any part of the payments due from the rest of the world in respect of interest on loans, the United States created a further claim on the rest of the world of £ 80,000,000, which she was not prepared to take in the form of goods and services As part payment for the immense sums owing to her, the United States imported last year a further 1,000 million dollars' worth of gold and 80 million dollars' worth of silver.

In spite of the increasingly strong creditor position of the United States, & consequently the larger demand by the other nations for dollars with which to satisfy their debts to America, the dollar, instead of becom ing more expensive in terms of foreign currencies, actually became cheaper. Whereas a dollar cost, on an average in 1933, 20.57 French francs, it only cost fr. 15.22 in 1934; and whereas it was only possible to obtain, on an average in 1933, $4.218 for £1, in 1934 $5.040 could be obtained.

**Exchange Anomalies**

